விலை: 50.00
பக்கங்கள் : 12
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 24
ஒலி 029 வள்ளுவர் ஆண்டு 2054 தை 03 செவ்வாய்க்கிழமை (17.01.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
1500/= + 500/=

## காணி விடுவிப்பு தொடர்பில் ஜனாதிபதியுடனான கலந்துரையாடலில் நம்பிக்கையில்லை

### சுமந்திரன் எம்.பி தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

வலி.வடக்கில் காணி விடுவிப்புத் தொடர்பில் யாழ்ப்பாணத்தில் நேற்று (நேற்று முன்தினம்) இடம்பெற்ற ஜனாதிபதியுடனான கலந்துரையாடலில் நம்பிக்கை இல்லை என பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தில் நேற்றையதினம் உள்ளூராட்சி மன்ற தேர்தலுக்கான கட்டுப்பணத்தை செலுத்திய பின்னர் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கே எம்.ஏ.சுமந்திரன் 11

## தேர்தல் தொடர்பான கலந்துரையாடல் நிறைவு

(கொழும்பு)

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பில் சகல பிரிவுகளுடனான கலந்துரையாடலும் தற்போது நிறைவடைந்துள்ளதாக 11

## மோ.சைக்கிள் மோதியதில் வயோதிபர் மரணம்

(யாழ்ப்பாணம்)

துவிச்சக்கரவண்டியில் பயணித்தவரை பின்னால் வந்த மோட்டார் சைக்கிள் மோதியதில் படுகாயம் அடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த வயோதிபர் ஒருவர் சிகிச்சை பலனின்றி நேற்று திங்கட்கிழமை உயிரிழந்துள்ளார்.

இதில் உரும்பிராய் வடக்கைச் சேர்ந்த ஐந்து பிள்ளைகளின் தந்தையான செல்லப்பா செல்வரத்தினம் (வயது-75) என்பவரே 11

## அனைத்து பல்கலைக்கழக மாணவர்கள்

# அரசாங்கத்துக்கு எதிராக கொழும்பில் போராட்டம்

### ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது கண்ணீர்ப்புகை, நீர்த்தாரை பிரயோகம்




(கொழும்பு)

பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் உள்ளிட்ட சிவில் அமைப்புகளால் கொழும்பில் நேற்று திங்கட்கிழமை முன்னெடுக்கப்பட்ட ஆர்ப்பாட்டத்தின் மீது பொலிஸாரினால் கண்ணீர்ப் புகை மற்றும் நீர்த்தாரை பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது. *(11ஆம் பக்கம் பார்க்க)*

## சாவகச்சேரிப் பகுதியில்

## கிணற்றுக்குள் தவறி விழுந்தவர் மரணம்


(சாவகச்சேரி)

சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட டச் வீதிப் பகுதியில் கிணற்றுக்குள் தவறிவிழுந்து நபரொருவர் உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் நேற்றுக்காலை இடம்பெற்றுள்ளது.

இதில் டச் வீதி சாவகச்சேரியைச் 11

# 13ஐ அமுல்படுத்தினால் இலங்கை பிளவடையும்



### மகாநாயக்க தேரர்களுக்கு விமல் வீரவன்ஸ கடிதம்

(கொழும்பு)

எதிர்காலத்தில் இடம்பெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலை இலக்காக கொண்டு அரசியலமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமை 11

## மாவிட்டபுரத்தில் விபத்து; இளைஞன் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறை, மாவிட்டபுரம் பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் இளைஞரொருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

நேற்று திங்கட்கிழமை மதியம் 3.30 மணியளவில் பட்டா வாகனமும் துவிச்சக்கர வண்டியும் மோதியே விபத்து சம்பவித்துள்ளது.

இதில் மாவைகலட்டி பகுதியைச் சேர்ந்த 27 வயதான தா.தினேஷ் என்ற இளைஞரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். 11

## மின்கட்டணம் உயர்ந்துள்ளதை தெரிவித்து

## மின்மானி வாசிப்பாளர் மீது கடும் தாக்குதல்

(கொழும்பு)

தமது வீட்டிற்கான இந்த மாத மின்சாரக் கட்டணம் அதிகரித்துள்ளதாகக் கூறி, மின்மானி வாசிப்பாளர் ஒருவரை, கட்டையால் தாக்கிய சம்பவம் ஒன்று புத்தளம் - மஹகும்புக்கடவல பகுதியில் பதிவாகியுள்ளது.

தாக்குதலுக்கு இலக்கான மின்மானி வாசிப்பாளர் கடும் 11

## நாட்டில் வேலையின்மை அதிகரிப்பு

(கொழும்பு)

நாட்டில் வேலையின்மை விகிதம் அதிகரித்துள்ளதாக இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

2022 ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டில் நாட்டின் வேலையின்மை விகிதம் 5% ஆக உயர்ந் 11

## சகல அரசியல்வாதிகளுக்கும்

# விசேட வரியினை அமுலாக்க ஆலோசனை

(கொழும்பு)

ஜனாதிபதி முதல் சகல அரசியல்வாதிகளுக்கும் அரசாங்க அதிகாரிகளுக்கும் விசேட வரியொன்றை அமுலாக்குவதற்கு ஆலோசிக்கப்பட்டு வருகிறது.

அவர்களது நிதியல்லாத சொத்துக்கள் மற்றும் வரப்பிரசாதங்களுக்கு வரி அறவிடப்படுவதில்லை.

அவர்கள் தங்கி 11



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

## திரு முருகேசு ரவிச்சந்திரன்

பிறப்பு
27 • 10 • 1969



இறப்பு
16 • 01 • 2023

பிறவுண் றோட்டை பிறப்பிடமாகவும் கொக்குவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட திரு முருகேசு ரவிச்சந்திரன் நேற்று (16.01.2023) திங்கட்கிழமை காலை 10.00 மணியளவில் இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகேசு - பிள்ளையம்மா தம்பதிகளின் அன்புப் புதல்வனும், கந்தையா - காலஞ்சென்ற கோவிந்தம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், தமயந்தி (யா/கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை ஆசிரியை) யின் பாசமிகு கணவரும். துவிஹாசன், வானவிஹா (யா/கொக்குவில் இந்துக் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், யோகராணி, காலஞ்சென்ற புஸ்பராணி, இந்திராணி, மல்லிகாராணி (ஜேர்மன்), காலச்சென்ற ஸ்ரீரஞ்சன், ஜெயராணி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற தணிகாசலம், இராசகுமார், இராஜேஸ்வரன் (ஜேர்மன்), உதயகுமார் (பிரான்ஸ்), யோகநாதன், யோகேஸ்வரி, நாகநாதன், சிவநாதன், ஜெகநாதன், சாரங்கன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.01.2023) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

நந்தாவில் லேன்,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில். (14279)

தகவல் - குடும்பத்தினர்
தொலைபேசி இலக்கம் :
076 282 7453/077 666 0572

## வல்வெட்டித்துறை பிரதேச வைத்தியசாலை நோயாளர் நலன்புரிச் சங்கம்

# வருடாந்தப் பொதுக்கூட்டம்

மேற்படி சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் எதிர்வரும் 05.02.2023 அன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு தலைவர் **Dr.V.கமலநாதன்** அவர்கள் தலைமையில் வைத்தியசாலை சிகிச்சை மண்டபத்தில் நடைபெறும்.

## நிகழ்ச்சி நிரல்

1. தலைவர் உரை
2. செயலாளர் சென்ற கூட்ட அறிக்கை சமர்ப்பித்தல்
3. செயலாளர் வருடாந்த அறிக்கை சமர்ப்பித்தல்
4. பொருளாளர் ஆய்வு செய்யப்பட்ட கணக்கறிக்கை சமர்ப்பித்தல்
5. கிடைக்கப்பெற்ற பிரேரணைகள் ஆராய்தல்
6. புதிய நிர்வாக சபை தெரிவு
7. பிறவிடயங்கள்.

பிரேரணைகள் ஏதும் இருப்பின் அவற்றை 24.01.2023 ஆம் திகதிக்கு முன்னதாக உதவிச் செயலாளர் திரு.து.சக்திவேல் அவர்களுக்கு அனுப்பி வைக்கும்படி கேட்டுக்கொள்வதோடு நடைபெறும் கூட்டத்திற்கு சமூகமளித்து வைத்தியசாலையின் முன்னேற்றத்திற்கு வேண்டிய ஆலோசனைகளை வழங்குமாறும் கேட்டுக் கொள்கின்றோம்.

**Dr.V.கமலநாதன்**
(தலைவர்)

(C-5795)

**திரு.து.சக்திவேல்**
(உதவிச் செயலாளர்)

# அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பிதழ்




இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக
ஏற்று கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

கடந்த 14.12.2022 புதன்கிழமை அன்று இறைபதமடைந்த எமது குடும்பத்தலைவர்

## அமரர் சுப்பர் துரைசிங்கம்

(ஓய்வு நிலை அதிபர், வலம்புரி பத்திரிகையின்
முன்னாள் செய்தி ஆசிரியர்)

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் 13.01.2023 வெள்ளிக்கிழமை காலை 7.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக் கரையில் நடைபெற்றது வீட்டுக்கிருத்திய கிரியைகள் இன்று 17.01.2023 செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் சுன்னாகம் கதிரமலைச் சிவன் தேவஸ்தான மண்டபத்தில் நடைபெறவிருப்பதால், அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**அன்னாரின் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும் மற்றும் தொலைபேசி வாயிலாக அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், மலர்வளையம் வைத்தவர்களுக்கும் மற்றும் கண்ணீர் அஞ்சலி போஸ்டர் வழங்கிய அனைவருக்கும் குடும்பத்தின் சார்பாக நன்றியை தெரிவித்துக்கொள்கின்றோம்.**

கப்பம்புலம், சுன்னாகம் கிழக்கு, சுன்னாகம். (14283) - குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரச ஊழியர்களின் சம்பளத்தை இரண்டு கட்டமாக வழங்க முடிவு

(கொழும்பு)

அரச நிறுவனங்களில் நிறை வேற்று தர அதிகாரிகள் மற்றும் சாதாரண அதிகாரிகளின் சம் பள த்தை இரண்டு கட்டமாக வழ ங்க திறைசேரி தீர்மானித்துள் ளது.

நாட்டின் நிதி நெருக்கடியை கவ னத்தில் கொண்டு திறைசேரி இந்த தீர்மானத்தை எடுத்துள்ளதாக தெரிய வருகிறது.

இதற்காக நிறைவேற்று தர அதி காரிகள் மற்றும் சாதாரண அதிகா ரிகளின் சம்பளத்தை வெவ்வேறு தினங்களில் வழங்கும் வகையில் பணத்தை வெளியிடுவதற்கு தேவை யான தகவல்களை வழங்குமாறு திறைசேரியின் நடவடிக்கை திணை க்களம் அரச நிறுவனங்களின் பிரதான நிதி அதிகாரிகள், கணக் காய்வாளர்கள், நிதிப்பணிப்பாளர்க ளுக்கு கடிதம் மூலம் அறிவித்துள் ளது.

இதனடிப்படையில், அரச ஊழி யர்களுக்கான சம்பளம் மாதந் தோறும் இருவேறு தினங்களில் இரண்டு கட்டமாக வழங்கப்பட வுள்ளது. (நி)


இந்தத் தகவலை தங்களுடைய நண்பர்களுடனும் நலன் விரும்பிகளுடனும் தயவுசெய்து பகிர்ந்து கொள்வதுடன், சரியான தகுந்த வேட்பாளரை தெரிவு செய்ய தாங்களும் எமக்கு உதவிபுரியுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**கட்சி அரசியல் அற்ற மக்கள் சேவையில் தாங்களும் விரும்பினால் வேட்பாளராக அல்லது பங்களிப்பாளராக இணைந்து எமது மக்கள் சேவையின் பாதையில் பயணிக்க முடியும்.**

## திரு.தியாகேந்திரன் (உரிமையாளர்-TCT) அவர்களின்

## மாநகர மக்களுக்கு மனம் நிறைந்த சேவை



50 வருடங்களுக்கு மேல் இலங்கை நாட்டில் 25 மாவட் டங்களில் தன்னலமற்ற சேவையை மக்களுக்காக ஆற்றி வரும் திரு.வாமதேவன் தியாகேந்திரன் (உரிமையாளர்-TCT) அவர்கள் இந்த வருடம் யாழ்.மாநகர வளர்ச்சியை விரும்பும் மக்களின் வேண்டுகோளுக்கு இணங்க , யாழ் மாநகரத்தின் அபிவிருத்தியை நோக்காகக்கொண்டு அரசியல் மற்றும் பதவி நோக்கமில்லா தொண்டனாக மாநகர சபைக்கு உட்பட்ட வட்டாரங்களில் மட்டும் தேர்தலில் பங்குபற்றுகின்றார்.

யாழ் நகரம் 2025 இல் சகல வசதிகளும் அழகும் நிறைந்த நாட்டின் சிறந்த நகரம் என்னும் தொனியில் சேவைநலன் விரும்பும் நண்பர்களுடன் இணைந்து காலத்தின் தேவையின் சேவையில் வள்ளலாகவும் வழிகாட்டியாகவும் பணிதொடர்கின்றார்.... TCT திரு.வாமதேவன் தியாகேந்திரன்.

தன்னுடன் கைகோர்த்து சேவை செய்ய உங்களையும் அழைக்கிறார் திரு. தியாகேந்திரன் அவர்கள்.

2023 உள்ளூராட்சி தேர்தலில் யாழ். மாநகர சபையின் வேட்பாளராக யாழ் மக்களுக்கு சேவை செய்ய விரும்புவர்கள் இணைந்து கொள்ளுங்கள்.

எங்களுடன் இணைந்து மாநகர மக்களுக்கு சேவை செய்ய விரும்பும் அனைவரும் பின்வரும் விடயங்களை தயவுசெய்து கருத்தில் கொள்ள வேண்டும்.

மாநகரத்தின் அபிவிருத்தி மற்றும் மாநகர மக்களின் நலனுக்காக நேர்மையாக செயற்படுபவராக இருத்தல் வேண்டும்.

பொதுநல நோக்கத்துடன் , ஒரே மனப்பாண்மையுடன் அனைவருடனும் ஒன்றிணைந்து செயற்படக்கூடியவராக இருத்தல் வேண்டும்.

சபையின் மாதச் சம்பளம் , ஒதுக்கீட்டுப் பணம் , அமர்வின் சலுகைகள் என்பவற்றை நோக்கமாக கொண்டு செயற்படுபவராக இருத்தல் கூடாது.

அத்துடன் மாநகர சபை அமர்வில் மதிய போசனம் , இரவுப் போசனம் , இரவுப்பொழுது விருந்துபசாரம் என்பவற்றுக்கு எமது அங்கத்தவர்களே செலவைப் பொறுப்பேற்க வேண்டும்.

எதுவித காரணம் கொண்டும் அங்கத்தவருக்குரிய மாதச் சம்பளம் சபையில் பெறப்படாது. அரசாங்கத்திற்கே திருப்பிக் கொடுக்கப்பட வேண்டும்.

அவர்களுக்குரிய ஒதுக்கீட்டுப் பணத்தை எதிர்பார்க்காமல், எம்முடன் இணைந்து யாழ்.மாநகரத்தின் அபிவிருத்தியை ஒரே நோக்கமாகக்கொண்ட மனப்பாண்மையுடன் செயற்பட வேண்டும்.

மாநகர சபைத் திட்டங்களுக்கு தத்தமது பங்களிப்பு மிகவும் அவசியம் என்பதை உணர்ந்து, எமது அங்கத்தவர்கள் சமூக சேவையைச் செயற்றிட்டம் தவிர்ந்த வேறு எவ்வித அரசியல் செயற்பாட்டிலும் ஈடுபடுவதை தவிர்க்க வேண்டும். (அரசியல் போராட்டங்கள், எதிர்ப்புப் போராட்டங்கள், அரசியல் இலாபகரமான செயற் பாடுகளை தவிர்த்தல் வேண்டும். அரசியல்வாதிகளை விமர்சனம் செய்வதை தவிர்க்க வேண்டும். கட்சிகளை விமர்சனம் செய்வதைத் தவிர்க்க வேண்டும்.)

மாநகர சபையின் 27 வட்டாரங்களில் இருந்து 48 பேர் தெரிவு இடம்பெறயிருப்பதால் தயவுசெய்து எதிர்வரும் 17 ஆம் திகதிக்கு முன்னர் எம்முடன் தயக்கமின்றி தொடர்பு கொள்ளவும். (17.01.2023 செவ்வாய்க்கிழமைக்கு முன்பு)

தொடர்புகளுக்கு :

**திரு.வாமதேவன் தியாகேந்திரன்,**
**இல: 527, நாவலர் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.**
**தொலைபேசி இலக்கம்: 021 222 8025 , 075 504 7229**

யாழ்.நகரம் வளர்ச்சி பெற , அனைத்து மக்கள் வாழ்விலும் மலர்ச்சி மலர , எமது நகரை நாடிவரும் அன்பர்கள் எமது சேவையில் மகிழ்ச்சியுற அனைவரும் இணைவோம். (C-5801)


# யாழில் அதிகரிக்கும் டெங்கு

## தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவு

(அராலி)

**யாழ்.மாவட்டத்தில் இந்த மாதத்தின் முதல் இரண்டு வாரங்களுக்குள் 255 டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளதாக தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது.**

இந்த வருடத்தின் முதல் இரண்டு வாரங்களில் நாடளாவிய ரீதியில் 4 ஆயிரத்து 178 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளதாகவும் கொழும்பு மாவ ட்டத்திலேயே அதிகளவான நோயாளர் கள் பதிவாகியுள்ளதுடன், நோயாளர்க ளின் எண்ணிக்கை 871 எனவும் தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவு தெரிவித்து ள்ளது.

கம்பஹா மாவட்டத்தில் 846 நோயா ளர்களும், களுத்துறை மாவட்டத்தில் 224 நோயாளர்களும் கண்டியில் 190 நோயாளர்களும் இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் பதிவாகி யுள்ளனர் என தேசிய டெங்கு கட்டுப்பா ட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது. (நி-104)

# மலையகத்தில் தீ விபத்து 7 வீடுகள் முற்றாக தீக்கிரை

(ஹற்றன்)

தலவாக்கலை பொலிஸ் பிரிவுக்கு ட்பட்ட தலவாக்கலை லோகி தோட்ட த்தின் மிடில்டன் பிரிவில் நேற்றிரவு ஏற்பட்ட தீ விபத்தால் 12 அறைகளைக் கொண்ட லயன் குடியிருப்பில் 7 வீடுகள் முழுமையாக தீக்கிரையாகியுள்ளன.

மேலும், 5 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளது. இதனால் 12 குடு ம்பங்களை சேர்ந்த 49 இற்கும் மேற் பட்டோர் நிர்க்கதியாகியுள்ளனர்.

குறித்த லயன் குடியிருப்பில் நேற்றிரவு திடீரென தீ விபத்து ஏற்பட்டுள்ளது. இதனையடுத்து மக்கள் கூச்சலிட்டுக் கொண்டு வெளியில் வந்தனர். அதற்குள் தீ வேகமாக பரவியது.

பரவிய தீயை அதே தோட்டத்தைச் சேர்ந்த தோட்டத் தொழிலாளர்கள் மற் றும் பிரதேசவாசிகள், தலவாக் கலை பொலிஸாரிடம் இணைந்து சுமார் மூன்று மணித்தியாலயங்களுக்கு பிறகு தீயை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர்.

தீ விபத்து ஏற்பட்ட போது வீடுகளில் வசித்த பெருந்தொகையானோர் தோட் டத்தில் நடைபெற்ற தைப்பொங்கல் நிக ழ்வில் கலந்துகொள்வதற்காக சென்றி ருந்ததால் தீ விபத்தில் யாருக்கும் காயம் ஏற்படவில்லை.

இந்த தீயினால் தோட்டத் தொழிலாள ர்களின் தனிப்பட்ட உடமைகளும் வீடு களில் வசித்த பிள்ளைகளின் பாடசாலை புத்தகங்கள் மற்றும் உபகரணங்களும் முற்றாக எரிந்து நாசமாகியுள்ளன. (நி)

# நிலக்கரி விலை பாரியளவில் அதிகரிப்பு

(கொழும்பு)

உலக சந்தையில் நிலக்கரியின் விலை அதிகரித்துள்ளதாக இலங்கை நிலக்கரி நிறுவனத்தின் தலைவர் ஷெஹான் சுமனசேகர தெரிவித்தார்.

எரிவாயுவைப் பயன்படுத்தி மின்சா ரத்தை உற்பத்தி செய்த சில நாடுகள் மீண்டும் நிலக்கரிக்கு மாறியதன் மூலம் அதற்கான தேவை அதிகரித்துள்ளதாக சுட்டிக்காட்டினர்.

இதன் காரணமாக உலக சந்தையில் நிலக்கரியின் விலை மீண்டும் அதிகரி க்கும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இவ்வருடத்துக்காக இலங்கைக்கு இறக்குமதி செய்யப்படவுள்ள 33 நிலக்கரி கப்பல்கள் எவ்வித பிரச்சினையும் இன்றி இலங்கைக்கு கொண்டுவரப்படும் என எதிர்பார்க்கப்படுவதாகவும் எவ்வாறா யினும், உலக சந்தையில் அதீதமாக அதிகரித்துள்ள நிலக்கரியின் விலை எதிர்காலத்தில் படிப்படியாக குறையும் என எதிர்பார்ப்பதாகவும் அவர் மேலும் தெரி வித்தார். (நி)

# சம்பிக்கவும் வெல்கமவும் இணைந்தனர்





(கொழும்பு)

பாட்டலி சம்பிக்க ரணவக்க தலை மையிலான 43 ஆவது படையணியும், குமார வெல்கம தலைமையிலான புதிய லங்கா சுதந்திரக் கட்சியும் புதிய உடன் படிக்கையில் கைச்சாத்திட்டுள்ளன.

எதிர்வரும் உள்ளூராட்சிசபைத் தேர் தலில் குறித்த இரு தரப்பினரும் இணை ந்து போட்டியிடும் வகையில் இந்த உடன் படிக்கை கைச்சாத்திடப்பட்டுள்ளது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இமாலய வெற்றியுடன் இலங்கையுடனான ஒருநாள் தொடரை முழுமையாக சுவீகரித்தது இந்தியா


## சிங்களம் சுகமாக படிப்போம்
சுபுன் ரணசிங்க

- தற்போதைய காலத்தில் பாடசாலையில் கட்டாய பாடமாக வந்த சிங்களம்?
- வேறொரு மொழியில் ஆசிரியர்மார் மூலம் எவ்வளவு படித்தாலும் பிள்ளைகள் கஷ்டம் என்று சொல்லும் சிங்களம்.
- ஒழுங்கான முறையில் சிங்கள ஆசிரியருடாக அடிப்படையிலிருந்து படிப்போமா?
- இம்முறை புலமைப்பரீட்சை முடிந்த பிள்ளைகளிற்கு புதிய வகுப்புகள்.

**Niru Tution Centre (Station Road, Kondavil)**
**தரம் 3/4/5 - சிங்களம் மற்றும் ஆங்கிலம்**
20.01.2023 - வெள்ளிக்கிழமை - 6.20 pm - 8.00 pm
**புலமைப் பரீட்சை முடிந்த புதிய 6ம் ஆண்டிற்கு சிங்களம்**
20.01.2023 - வெள்ளிக்கிழமை - 3.00 pm - 4.30 pm
**தரம் 6, 7, 8, 9, 10, A/L சிங்களம்**
23.01.2023 - திங்கட்கிழமை - 6.20 pm - 7.45 pm
**இளைஞர்களுக்கு சிங்களம்**
20.01.2023 வெள்ளிக்கிழமை - 8.00 pm - 9.30 pm

**திருநெல்வேலி கலாமன்ற சனசமூக நிலையம் (கலாசாலை வீதி)**
**தரம் 3/4/5 - சிங்களம் மற்றும் ஆங்கிலம்**
19.01.2023 - வியாழக்கிழமை - 3.00 pm - 4.45 pm
**புலமைப் பரீட்சை முடிந்த புதிய 6ம் ஆண்டிற்கு சிங்களம்**
19.01.2023 - வியாழக்கிழமை - 4.45 pm - 6.30 pm
**தரம் 6, 7, 8, 9, 10, A/L சிங்களம்**
19.01.2023 - வியாழக்கிழமை - 6.30 pm - 8.00 pm
**இளைஞர்களுக்கு சிங்களம்**
19.01.2023 வியாழக்கிழமை - 8.00 pm - 9.30 pm

**I'deal Tution Centre (யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிக்கு அருகாமையில்)**
**தரம் 3/4/5 - சிங்களம் மற்றும் ஆங்கிலம்**
18.01.2023 - புதன்கிழமை - 6.20 Pm - 7.45 pm
**புலமைப் பரீட்சை முடிந்த புதிய 6ம் ஆண்டிற்கு சிங்களம்**
21.01.2023 - சனிக்கிழமை - 8.30 pm - 10.30 pm
**தரம் 6, 7, 8, 9, 10, A/L சிங்களம்**
24.01.2023 - செவ்வாய்க்கிழமை - 6.30 pm - 7.45 pm
**இளைஞர்களுக்கு சிங்களம்**
24.01.2023 செவ்வாய்க்கிழமை -7.45 pm - 9.30 pm

**அறிவியல் கல்வி நிலையம் (கோண்டாவில் டிப்போ முன்பாதை)**
**புலமைப் பரீட்சை முடிந்த புதிய 6ம் ஆண்டிற்கு சிங்களம்**
21.01.2023 - சனிக்கிழமை - 2.00 pm - 4.00 pm
**தரம் 6, 7, 8, 9, 10, A/L சிங்களம்**
21.01.2023 - சனிக்கிழமை - 4.00 pm - 6.00 pm (14284)

மின்சாரம் தடைப்படும் நேரத்திலும் வகுப்புகள் நடைபெறும்.
தொ.பே.எண் - 071 619 6536





இந்திய கிரிக்கெட் அணிக்கெதிரான மூன்றாவதும் இறுதியுமான ஒருநாள் போட்டியில், இலங்கை அணி, மிக மோசமான வரலாற்று தோல்வியைச் சந்தித்தது.

ஒருநாள் கிரிக்கெட்டில் அணியொன்று அதிகபட்ச ஓட்ட வித்தியாசத்தில் தோல்வியை தழுவியது இதுவே முதல்முறையாகும்.

திருவானந்தபுரம் மைதானத்தில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற இப்போட்டியில், நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற இந்திய அணி, முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி, நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்கள் நிறைவில் 5 விக்கெட்டுகள் இழப்புக்கு 390 ஓட்டங்களை பெற்றுக் கொண்டது.

இதில் அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக, விராட் கோலி ஆட்டமிழக்காது 166, சுப்மன் கில் 116 ஓட்டங்களை பெற்றுக் கொண்டனர்.

இலங்கை அணியின் பந்துவீச்சில், ராஜித மற்றும் லஹிரு குமார ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளையும் திமுத் கருணாரத்ன ஒரு விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இதனைத் தொடர்ந்து 391 என்ற இமலாய வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு களமிறங்கிய இலங்கை அணி, 22 ஓவர்கள் நிறைவில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 73 ஓட்டங்களுக்கு சுருண்டது.

இதன்போது அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக, நுவனிந்து பெனார்டோ 19 ஓட்டங்களையும் கசுன் ராஜித 13 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர்.

இந்திய அணியின் பந்துவீச்சில், மொஹமட் சிராஜ் 4 விக்கெட்டுகளையும் மொஹமட் ஷமி மற்றும் குல்தீப் யாதவ் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களை கைப்பற்றினர். போட்டியின் நாயகனாகவும் தொடரின் நாயகனாகவும் இந்தியாவின் நட்சத்திர துடுப்பாட்ட வீரர்கோலிதெரிவு செய்யப்பட்டார்.(4)

### கனிஷ்ட வலைப்பந்தாட்ட அணிக்கு

## யா/ வட இந்து மகளிர் கல்லூரி மாணவிகள் இருவர் தெரிவு



இலங்கை வலைப்பந்தாட்ட சங்கத்தினால் நடத்தப்பட்ட கனிஷ்ட வலைப்பந்தாட்ட அணிக்கான தெரிவில் யா/வட. இந்து மகளிர் கல்லூரியைச் சேர்ந்த இரு மாணவகள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இலங்கைவலைப்பந்தாட்டசங்கத்தினால் நடத்தப் பட்ட கனிஷ்ட வலைப் பந்தாட்ட அணிக்கான தெரிவுஅண்மையில்கொழும்பு டொரிங்டன் விளையாட்டு மைதானத்தில் நடை பெற்றது.

இதில் யாழ்.மாவட்டத்தில் வட இந்து மகளிர் கல்லூரியைச் சேர்ந்த வசந்தன் ஆர்த்திகா மற்றும் பாலசந்திரன் பானுஜா இரண்டு பேரும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (4-6-90)


# 1ம் ஆண்டு நினைவு நாள்

17.01.2023

கடந்த 27.01.2022 அன்று இறைபதமடைந்த
எமது அன்புத் தெய்வம்

## அமரர் வீரகத்திப்பிள்ளை இராமநாதன்

(ஆதீன தர்மகர்த்தா, முன்னைநாள் தலைவர்,
நாகதம்பிரான் ஆலயம் - புளியம்பொக்கணை)



**அருளொளியே அணைந்தனையோ!**

புளியம்பொக்கணையின்
புண்ணிய நாயகனே! – எங்கள்
பொலிவிழையும் பூமியின்
பொற்கோயிற் சேவகனே!!.

புன்னகைப் பூ விரியுமுந்தன்
பொன்முகத்தை நாமிழந்தோம்! – இன்று
ஆண்டொன்று தான்கடந்தும்
துன்பத்திலே துவழுகிறோம்!!.

நாகதம்பிரான் சந்நிதியின்
நாற்பதாண்டுப் பொக்கிசமே! – வான
மேகத்தோடு விண்திரைக்குள்
முகம் மறைந்த பொற்சுடரே!!.

நாளுமெங்கள் நாதன் வாசல்
நாடியுமைத் தேடுதையா! – கோயில்
அரசமரக் கிளையின் காற்றும்
அழுதழுதே வீசுதையா!!.

பூ மலர்ந்த கொடிகளெல்லாம்
புன்னகையை இழந்து நிற்க! – இங்கு
பால் சுரந்த பசுக்கள் கூடவுன்
பாசத்திற்காய் ஏங்குதிங்கே!!.

பாடுமெங்கள் பஜனைகளும்
பண்ணிழந்து அழுதுதுன்னால்! – தெய்வ
பக்திமிசைப் பாடலெல்லாம்
பதமிழந்தே புலம்புதுன்னால்!!.

பரம் பொருளான் பூசைகளும்
பக்திரதம் இழந்து போக! – நித்தம்
சுரம்தெளிக்கும் மணியொலியும்
குரலிழந்தே ஒலித்ததுன்னால்!!.

பண்டமெடுப்புப் பயணமேறில்
பாதையெல்லாம் உந்தன் முகம்! – வளவை
அண்டியுள்ள வயல்வெளியின்
காற்றலையில் உந்தன் குரல்!!.

காலதேவன் காலத் தீர்ப்பில்
கண்ணுறங்கிய தர்ம கர்த்தாவே! – எங்கள்
கோயில் வளவில் கோபுரமாகி
விண்ணுயர்ந்த உத்தமரே!!.

தம்பிரானின் காலடியே உந்தன்
சொர்க்கமென்று சேர்ந்தனையோ! – அந்த
தேவலோக வாழ்வில் உன்னை
முக்தியெனக் கோர்த்தனையோ!!.

குடும்பத்தினர்

(C-5803)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மிருசுவிலில் திருடிய மாடு வடமராட்சியில் அகப்பட்டது

(சாவகச்சேரி)

கொடிகாமம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மிருசு வில் மருதங்குளம் பகுதி யில் கடந்த சனிக்கிழமை இரவு திருடப்பட்ட மாடு மறுநாள் காலையில் வட மராட்சிப் பகுதியில் பொலி ஸாரால் மீட்கப்பட்டுள் ளது.

குறித்த மாடு இன்னொரு தரப்பினருக்கு விற்பனை செய்யப்பட்டிருந்த நிலையில் பொலிஸாரால் மீட்கப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

கடந்த சில காலமாக தென்மராட்சியின் எழுதுமட்டுவாழ்.வரணி மற்றும் மிருசுவில் பகுதிகளில் இருந்து கால் நடைகள் திருடப்பட்டு வட மராட்சிப் பகுதிக்கு கொண்டு செல்லும் செயற்பாடு இடம் பெற்று வருவதாக பொது மக்கள் சுட்டிக் காட்டியுள்ளனர். (4-6-30)

# தமிழரசுக் கட்சி யாழில் கட்டுப்பணம் செலுத்தியது

(யாழ்ப்பாணம்)

இலங்கைத் தமிழரசுக் கட்சி யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ளூராட்சிமன்ற தேர்தலுக்கான கட்டுப்பணத்தை நேற்று திங்கட் கிழமை செலுத்தியது.

யாழ்ப்பாண மாவட்ட செயலகத்திலுள்ள தேர்தல்கள் அலுவலகத்தில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பதில் செயலாளர் த.சத்தியலிங்கம், பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் மற்றும் வலி வடக்கு பிரதேச சபை தவிசாளர் சோ.சுகிர்தன் ஆகியோரால் கட்டுப் பணம் செலுத்தப்பட்டது.

யாழ்.மாவட்டத்திலுள்ள சகல உள்ளூராட்சி சபைகளுக்கும் இதன் போது கட்டுபணம்செலுத்தப் பட்டதாக பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்தார். (4-6-33)

# நாவலரின் ஆண்டு நிறைவு விழாவும் புத்தக கண்காட்சியும்

(யாழ்ப்பாணம்)

ஆறுமுகநாவலரின் 200 ஆவது ஆண்டு நிறைவு விழாவும், 2022-(2023) புத்தகக் கண்காட்சியும் மேற்படி விழா எமது யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் நாளை புதன் கிழமை காலை 8 மணிக்கு கல்லூரியின் பீடாதிபதி சுப்பிரமணியம் பரமானந்தம் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இவ் விழாவில் ஆறுமுகநாவலரின் திரு உருவச் சிலை இராசவீதிச் சந்தியில் இருந்து யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரிக்கு ஊர்வலமாக எடுத்து வரப்பட உள்ளது.

பின்னர் கல்லூரியின் பிரதான மண்டபத்தில் மாணவ ஆசிரியர்களின் கலை நிகழ்வுகளும் இடம் பெறும். அத்துடன் ஆறு முகநாவலரின் 200 ஆவது ஆண்டையொட்டி நடைபெற்ற பேச்சுப் போட்டி, விவாதப்போட்டி, கவிதைப் போட்டி ஆகிய வற்றில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசில்களும் வழங்கப்பட உள்ளன. (4)


## நல்லூர் பிரதேச சபை, பகிரங்க ஏல அறிவித்தல்

இடம் :- தலைமை அலுவலகம் நல்லூர் பிரதேச சபை
காலம் :- 09.02.2023 ஆம் திகதி மு.ப 10.30 மணி
ஏலவிபரம் :- சபைக்குச் சொந்தமான கீழ்க்குறிப்பிடப்படும் அட்டவணையில் விவரிக்கப்பட்ட கடைகளை வாடகைக்கு வழங்குவதற்கான பகிரங்க ஏல அறிவித்தல்.

| தொ. இல | கடை விபரம் | ஆகக் குறைந்த ஏலத்தொகை (VAT,NBT நீங்கலாக) |
|---|---|---|
| 1 | கொக்குவில் மீன்சந்தை வளாகத்தில் அமைந்துள்ள மேல்த்தளம் கடை இல 1/1 | 1,440,000.00 |
| 2 | கொக்குவில் மீன்சந்தை வளாகத்தில் அமைந்துள்ள மேல்மாடி கடை இல 2/1 | 1,680,000.00 |

ஆர்வம் உள்ளோர் 09.02.2023 ஆம் திகதி மு.ப 8.30 தொடக்கம் மு.ப 10.15 வரை ரூபா 1,000.00 கட்டணம் செலுத்தி உரிய விண்ணப்ப படிவத்தில் விண்ணப்பித்து மு.ப 10.30 மணிக்கு நடைபெறும் பகிரங்க ஏலத்தில் கலந்துகொள்ளலாம். சித்தி பெறும் ஏலதாரர் ஏலத்தொகையினையும் மூன்று மாத வாடகையினையும் ஒரே தடவையில் 17.02.2023 ஆம் திகதி பி.ப 2.00 மணிக்கு முன்னர் செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் ஒன்றினை செய்து கொள்ள வேண்டும். தங்களால் செலுத்தப்படும் ஏலத்தொகை எக்காரணம் கொண்டும் தங்களிற்கு மீளளிக்கப்படமாட்டாது. ஏலம் தொடர்பான மேலதிக தகவல்களினை தலைமை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

திரு.ப.மயூரன்
தவிசாளர்,நல்லூர் பிரதேச சபை. 021 222 2700



## வலிகாமம் மேற்கு பிரதேசசபை, சுழிபுரம்
## ஆதனப் பெயர்மாற்றம்

**06,பருத்தித்துறை வீதி, வட்டாரம்-01.**

வலிகாமம் மேற்கு பிரதேச சபை, சுழிபுரம் உப அலுவலகம் எல்லைக்குட்பட்ட வட்டாரம் 01 பருத்தித்துறை வீதியிலுள்ள இல: 06 ஆகிய ஆதனம் எமது ஆதன வரிப் பதிவேட்டின் பிரகாரம் சொந்தக்காரர் என்றே காணப்படுகிறது.

பெயர் மாற்றத்திற்குட்படும் ஆதனம் **சின்னத்தம்பி இராசசிங்கம்** ஆகியவர் குறித்த ஆதனம் 12.03.1908 ஆம் திகதி யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்ற 1961 ம் இலக்க தத்துவ வழக்கில் கணபதிப்பிள்ளை மாணிக்கம் ஆகிய தனது பேரனார் வழியில் தனது மாதாவழி முதுசமும் ஆட்சியுமாக இருந்தது என்றும் யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்ற தத்துவ வழக்கு T/ 2662 இன் படி தனது காலஞ்சென்ற மாதாவழி மாமனார் மாணிக்கம் தெட்சணாமூர்த்தியின் வழியில் தனது மாதாவழி முதுசமும் ஆட்சியுமானது என்றும் நிலஅளவையாளர் A.கந்தசாமி அவர்களால் 30.12.2016ம் திகதி அளந்து வரைந்த 2016/4/286 இலக்கப் படத்தின்படி நிந்தமும் ஆட்சியுமானது என்றும் குறித்த ஆதனம் இற்றைக்கு 50 வருடங்களுக்கு மேலாக எவ்வித இடையூறுமின்றி தன்னால் ஆட்சிசெய்யப்பட்டு வருகின்றது என்றும் வெளிப்படுத்தி பிரசித்த நொத்தாரிசு சோ.தேவராஜா முகதாவில் 7699/06.03.2017 ஆம் இலக்கத்தில் பிரக்டனப்படுத்தல் உறுதியொன்றை நிறைவேற்றியுள்ளார்.

குறித்த சின்னத்தம்பி இராசசிங்கம் ஆகியவர் ஆதனப் பெயர் மாற்றத்திற்கு விண்ணப்பித்துள்ளார்.

இவ் ஆதனப்பெயர் மாற்றம் தொடர்பாக ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் யாராவது இருப்பின் உரிய ஆவணங்களுடன் 30 நாட்களுக்குள் எழுத்து மூலம் அறியத் தருமாறும் அவ்வாறு உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது, சின்னத்தம்பி இராசசிங்கம் ஆகியவரிற்கு பெயர்மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும். என்பதுடன் இந்த ஆதனப் பெயர் மாற்றத்தால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் மேற்கு பிரதேசசபை பொறுப்பாளியல்ல என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

தவிசாளர்/செயலாளர் , வலிகாமம் மேற்கு பிரதேச சபை. (4277)



## ஓராண்டு நினைவலைகள்...



அன்னை மடியில் 14.08.1924
ஆண்டவன் அடியில் 27.01.2022

அமரர்.திருமதி.

**மகேஸ்வரி கார்த்திகேசு**

ஆண்டொன்று கடந்தாலும்...
உங்கள் திருவுருவம் அகம் தன்னில் அழியாது
ஆண்டவன் திருவடியில்
உங்கள் ஆத்மா அமைதியாக உறங்கட்டும்
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

(14005)

"தங்க அகம்" சூராவத்தை,
சுன்னாகம்.

குடும்பத்தினர்


# இராசிபலன்

17.01.2023
தை 03, செவ்வாய்க்கிழமை
தசமி பிற்பகல் 1.19 மணிவரை

விசாகம் பிற்பகல் 2.34 மணிவரை
சுபநேரம் -11.05-12.35 மணிவரை
இராகு காலம் -3.35-5.05 மணிவரை

சந்திராஷ்டமம்
அச்சுவினி,பரணி.

வளவன்

**மேஷம்** மனதில் இனம்புரியாத கவலைகள் தோன்றி மறையும், கொடுக்கல் வாங்கல்களில் கவனம் தேவை, வழிபாட்டால் திருப்தி காண வேண்டிய நாள், ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

**ரிஷபம்** வெளியூர் தொடர்புகள் அனுகூலம் தரும், புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் மேலோங்கும், அடுத்தவர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், குடும்ப மகிழ்ச்சி கூடும் நாள்.

**மிதுனம்** கூட்டுத் தொழிலில் எதிர்பார்த்த நன்மைகள் கிடைக்கலாம், வீட்டை பராமரிப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள், தன்னம்பிக்கையும் தைரியமும் அதிகரிக்கும் நாள்.

**கடகம்** கல்வி நலன்கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், மாற்று மருத்துவத்தால் உடல் நலன் சீராகும்.

**சிம்மம்** உறவினர் வழியில் எதிர்பார்த்த நற்பலன் கிடைக்கும், சிந்தித்துச் செயற்பட்டு சிறப்புக்களைக் காணும் நாள், வாகன யோகத்தால் வளம் காணும் நாள், தொலைபேசி வழித்தகவல் மகிழ்ச்சி தரும்.

**கன்னி** கொடுக்கல் வாங்கல்கள் ஒழுங்காக வள்ளல்களின் உதவியை நாடுவீர்கள், தன்னம்பிக்கையோடு செயற்படுவீர்கள், உறவினர் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு.

**துலாம்** சுபகாரியப் பேச்சுக்கள் நல்ல முடிவுக்கு வரலாம், உங்கள் பொறுமைக்கு இன்றுபரிசு கிடைக்கும், எதிர்பாராத தனவரவுகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, வாக்கு மேன்மையுண்டு.

**விருச்சிகம்** விரும்பிய காரியம் விரும்பிய படியே கைகூடும், வழிபாடு குதூகலம் தரும், கற்பனை மிகுதியான நாள், குடும்பத்தினர் உங்கள் குணமறிந்து நடந்து கொள்வர்.

**தனுசு** பக்குவமாகப் பேசி காரியம் சாதிக்க வேண்டிய நாள், திட்டமிட்ட காரியமொன்றில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், சுப விரயங்கள் அதிகரிக்கும் நாள்.

**மகரம்** பெரிய மனிதர்களின் சந்திப்புக்கள் இடம் பெறும் வாய்ப்புண்டு, வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளும் எண்ணம் உருவாகும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**கும்பம்** நல்லவர்களின் அறிவுரையும் ஆதரவும் கிடைக்கும், தொழில் நலன் கருதி தீட்டிய திட்டங்கள் கைகூடும், செவி குளிரும் செய்திகள் வந்து சேரலாம், போசன சுகமுண்டு.

**மீனம்** தடைப்பட்ட காரியங்களில் -முன்னேற்றம் காணும் நாள், அன்பால் சாதித்துக் காட்டும் நாள், விலகிச் சென்றவர்கள் விரும்பி வந்து சேருவர், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு.

உனக்குத் தெரியாததை தெரியாது என்று ஒப்புக்கொள்வதே அறிவு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளி/கிளிநொச்சி மகா வித்தியாலயம்-பாராட்



அதிபர், பிரதி, உதவி அதிபர்கள், வகுப்பாசிரியர்கள்.



9A-18, 8A-13, 7A-09, 6A-08, 5A-15, 4A-06, 3A-14

ஏனையவர்கள்-93 பேர், தோற்றியோர்- 202, சித்தியடைந்தோர்-176

















விளம்பர அனுசரணை : ஐங்கரன் நகைமாடம் பழைய கச்சேரி முன்பாக, யாழ் சாலை, கிளிநொச்சி

Dream City Hotel, No 524A, 3rd lane Thirunagar, Kilinochchi

(C-5800)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ட்டி வாழ்த்துகின்றோம்

2021 க.பொ.த.சாதாரண தரம் (2022) எமது பாடசாலையில் சித்தியடைந்து உயர்கல்வி கற்கும் மாணவர்களை தொடர்ந்தும் சாதனைகள் படைக்க வாழ்த்துகின்றோம். இம்மாணவர்களை வழிப்படுத்திய அதிபர், பிரதி, உதவி அதிபர்கள், கற்பித்த ஆசிரியர்கள் அனைவரையும் வாழ்த்தி நன்றி கூறுகின்றோம்.













பாடரீதியான க.பொ.த சாதாரண பரீட்சை பகுப்பாய்வு 2021

| பாடம் | பரீட்சைக்குத் தோற்றிய மாணவர் எண்ணிக்கை | பரீட்சையில் சித்தியடைந்த மாணவர் எண்ணிக்கை | A | B | C | S | W | சித்திவீதம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| சைவசமயம் | 176 | 161 | 75 | 20 | 47 | 19 | 15 | 91.5% |
| கத்தோலிக்கம் | 16 | 14 | 5 | 3 | 3 | 3 | 2 | 88% |
| கிறிஸ்தவம் | 10 | 10 | 3 | 1 | 5 | 1 | - | 100% |
| தமிழ் | 202 | 194 | 84 | 36 | 52 | 22 | 8 | 96% |
| கணிதம் | 202 | 155 | 79 | 24 | 29 | 23 | 47 | 76.7% |
| விஞ்ஞானம் | 202 | 144 | 41 | 21 | 40 | 42 | 58 | 71.3% |
| ஆங்கிலம் | 202 | 154 | 36 | 40 | 36 | 42 | 48 | 76.2% |
| வரலாறு | 202 | 158 | 53 | 21 | 36 | 48 | 44 | 78.2% |
| புவியியல் | 49 | 45 | 10 | 4 | 17 | 14 | 4 | 92% |
| வணிகம் | 60 | 53 | 18 | 10 | 17 | 8 | 7 | 88% |
| குடியியல் | 54 | 44 | 5 | 9 | 14 | 16 | 10 | 81% |
| முயற்சியாண்மை | 39 | 39 | 24 | 8 | 7 | - | - | 100% |
| சங்கீதம் | 25 | 25 | 17 | 4 | 4 | - | - | 100% |
| சித்திரம் | 53 | 52 | 4 | 8 | 23 | 17 | 1 | 98% |
| நடனம் | 23 | 23 | 7 | 4 | 7 | 5 | - | 100% |
| நாடகம் | 27 | 27 | 14 | 4 | 9 | - | - | 100% |
| தமிழ் இலக்கிய நயம் | 70 | 57 | 20 | 14 | 12 | 11 | 13 | 81.4% |
| ஆங்கில இலக்கியநயம் | 3 | 2 | - | 1 | - | 1 | 1 | 67% |
| மனையியல் | 9 | 9 | - | 1 | 2 | 6 | - | 100% |
| சுகாதாரம் | 97 | 90 | 32 | 18 | 27 | 13 | 7 | 93% |
| ICT | 62 | 61 | 29 | 15 | 14 | 3 | 1 | 98.4% |
| விவசாயம் | 34 | 28 | 16 | 1 | 5 | 6 | 6 | 82% |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியர்
திருமதி.தமயந்தி ரவிச்சந்திரன் அவர்களின்
அன்புக் கணவர்

## திரு.முருகேசு ரவிச்சந்திரன்



அவர்களின் இழப்பினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு பாடசாலைச் சமூகத்தின் சார்பில் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்தித்துக் கொள்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!! (சி-5799)

**ஆசிரியர் நலன்புரிக் கழகம், யா/கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை**

## நல்லூர் பிரதேச சபை, பகிரங்க ஏல அறிவித்தல்

இடம் :- தலைமை அலுவலகம் நல்லூர் பிரதேச சபை

காலம் :- 09.02.2023 ஆம் திகதி மு.ப 10.30 மணி

ஏலவிபரம் :- நல்லூர் பிரதேச சபையின் அதிகார எல்லைக்குட்பட்ட கீழ்க்காணும் இறைச்சிக்கடைகள் குத்தகைக்கு விடுவதற்கான பகிரங்க ஏல அறிவித்தல்.

| இல | இறைச்சிக்கடைகள் | தற்போதைய ஏலத் தொகை |
|---|---|---|
| | நல்லூர் உப அலுவலகம் | |
| 1 | திருநெல்வேலிச்சந்தை ஆட்டிறைச்சிக் கடை | 756,593.14 |
| 2 | திருநெல்வேலிச்சந்தை கோழியிறைச்சிக் கடை இல 01. | 104,696.80 |
| 3 | திருநெல்வேலிச்சந்தை கோழியிறைச்சிக் கடை இல 02. | 132,377.63 |
| | கொக்குவில் உப அலுவலகம் | |
| 4 | கொக்குவில் உப அலுவலக மாட்டிறைச்சிக் கடை | 1,607,663.86 |
| 5 | கோண்டாவில் ஸ்ரேசனடி மாட்டிறைச்சிக்கடை | 836,163.54 |

ஆர்வம் உள்ளோர் 09.02.2023 ஆம் திகதி மு.ப 8.30 தொடக்கம் மு.ப 10.15 வரை ரூபா 500.00 கட்டணம் செலுத்தி உரிய விண்ணப்ப படிவத்தில் விண்ணப்பித்து மு.ப 10.30 மணிக்கு நடைபெறும் பகிரங்க ஏலத்தில் கலந்து கொள்ளலாம். சித்தி பெறும் ஏலதாரர் ஏலத்தொகையின் 1/3 இனையும் குறித்த காலப்பகுதிக்குரிய மாதவாடகை யினையும் 17.02.2023 ஆம் திகதி பி.ப 2.00 மணிக்கு முன்னர் செலுத்தி ஒப்பந்தம் செய்து கொள்ளவேண்டும். ஏலம் தொடர்பான மேலதிக தகவல்களினை தலைமை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம். (சி-5796)

திரு.ப.மயூரன்
தவிசாளர் ,நல்லூர் பிரதேச சபை. 021 222 2700

## ஐ.ம.ச, சமத்துவக் கட்சி கட்டுப்பணம் செலுத்தியது

(முறிகண்டி)

ஐக்கிய மக்கள் சக்தி, சமத்துவக் கட்சி என்பன நேற்று கிளிநொச்சியில் கட்டுப்பணம் செலுத்தின. (4-6-100)

# மரண அறிவித்தல்

## திருமதி.இராஜலட்சுமி சோமசேகரம்பிள்ளை

(ஓய்வு பெற்ற ஆசிரியர்)



பிறப்பு-26.01.1950 இறப்பு-15.01.2023

யாழ்ப்பாணம் தெல்லிப் பழையை பிறப்பிடமாகவும் வத்தளையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி. இராஜலட்சுமி சோமசேகரம்பிள்ளை அவர்கள் 15.01.2023 ஞாயிற்றுக்கிழமை சிவபதம் அடைந்தார்.

அம்மையார் காலஞ்சென்றவர்களான குமாரகுலசிங்கம் பாலாம்பிகை தம்பதியரின் பாசமிகு மகளும் காலஞ்சென்ற கனகரத்தினம் பவளம் தம்பதியரின் பாசமிகு மருமகளும்

சோமசேகரம்பிள்ளை அவர்களின் அன்பு மனைவியும் ரஜீவ், பிரதீப் ஆகியோரின் பாசமிகு தாயும் ஹேமநிலாவின் பாசமிகு மாமியாரும் ஸம்ஸ்ரீதாவின் அன்புப் பேர்த்தியும் அமரர் பாலசிங்கம், ஜெயலட்சுமி, சிவநாதன் (அமரர்), சத்தியநாதன் , அமரர் ருக்மணி தேவி, விஜயலட்சுமி, அருந்தவநாதன்,ராஜநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை 18.01.2023 மகிந்த மலர்சாலையில் (No.286, Negambo Rd ,Wattala) பார்வைக்கு 8 A.M- 11A.M வரைக்கும் வைக்கப்பட்டு மதியம் 12 மணியளவில் கெரவலப்பிட்டிய மயானத்தில் தகனம் செய்யப்படவுள்ளது. இத் தகவலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

12/5,மூத்த தம்பி வீதி,மானிப்பாய் (சி-5798) தகவல்-குடும்பத்தினர்

# கல்கியின் பொன்னியின் செல்வன்

பாகம் - 1

காவியத் தொடர் 78





க்கப் போகிறேன்!

இவ்வளவு எண்ணமும் சில கண நேரத்தில் வந்தியத்தேவனுடைய மனத்தில் ஊடுருவிச் சென்றன. அங்கு நின்று சிரித்தவர்கள் மட்டும் ஆண் மக்களாயிருந்திருந்தால், அங்கேயே ஒரு போர்க்களம் ஏற்பட்டிருக்கும்! சிரிக்கத் துணிந்தவர்கள் அக்கணமே உயிரை இழந்திருப்பார்கள்! அரிசிலாற்றின் செந்நீர்ப் பிரவாகத்துடன் அவர்களுடைய இரத்தமும் கலந்து ஓடியிருக்கும்! ஆனால் இவர்கள் பெண்கள்! இவர்களை என்ன செய்ய முடியும்? இவர்களை விட்டு ஓடிப் போவது ஒன்று தான் செய்யக்கூடிய காரியம்!

தன் உள்ளத்தை நிலைகுலையச் செய்த மங்கையின் முகத்தைக் கூட ஏறிட்டுப் பார்க்காமல் வந்தியத்தேவன் பாய்ந்து ஓடி நதிக்கரை மீது ஏறினான். அங்கே நின்றிருந்த அவனுடைய குதிரையும் அச்சமயம் ஒரு கனைப்புக் கனைத்தது.

குதிரையும் கூட அப்பெண்களுடன் சேர்ந்து தன்னைப் பார்த்துச் சிரிப்பதாகவே வந்தியத்தேவனுக்குத் தோன்றியது. எனவே தன் கோபத்தையெல்லாம் அக்குதிரையின் பேரில் காட்டினான். அதன் மேல் பாய்ந்து ஏறி உட்கார்ந்து தலைக் கயிற்றினால் 'சுளீர், சுளீர்' என்று இரண்டு அடி கொடுத்தான்! அந்த ரோஷமுள்ள குதிரை நதிக்கரைச் சாலையின் வழியாகப் பிய்த்துக் கொண்டு பாய்ந்தோடியது.

சிறிது நேரம் வரையில் குந்தவைப்பிராட்டி குதிரை போன திசையைப் பார்த்துக் கொண்டிருந்தாள். குதிரை கிளப்பிய புழுதி அடங்கும் வரையில் பார்த்துக் கொண்டு நின்றாள்.

பின்னர், தோழிப் பெண்களைத் திரும்பிப் பார்த்து, "பெண்களா! உங்களுக்கு மட்டுமரியாதை இன்னும் தெரியவில்லை. நீங்கள் அப்படிச் சிரித்திருக்கக் கூடாது. நாம் தனியாயிருக்கும் போது, எப்படி வேண்டுமானாலும் நீங்கள் சிரித்துக் கும்மாளம் அடிக்கலாம்.

அன்னிய புருஷன் வந்திருக்கும் போது அடக்கமாயிருக்க வேண்டாமா? சோழ நாட்டுப் பெண்களைப் பற்றி அந்த வாலிபன் என்ன எண்ணிக் கொண்டு போவான்?" என்று சொன்னாள்.

**பதினெட்டாம் அத்தியாயம்**
**இடும்பன்காரி**

கொள்ளிடத்துப் பரிசில் துறையில் ஆழ்வார்க்கடியான்நம்பி என்னும் திருமலையப்பனை விட்டு விட்டு வந்து விட்டோம். அந்த வீர வைஷ்ணவரை இப்போது கொஞ்சம் கவனிக்கலாம்.

வந்தியத்தேவன் குதிரை ஏறிக் குடந்தை நகர் நோக்கிச் சென்றதும், திருமலை அவன் போன திசையைப் பார்த்துக் கொண்டே தனக்குள் சொல்லிக் கொண்டான்.

"இந்த வாலிபன் மிகப் பொல்லாதவனாயிருக்கிறான். நாம் தட்டியில் நுழைந்தால் இவன் கோலத்தில் நுழைகிறான். இவன் உண்மையில் யாருடைய ஆள், எதற்காக, எங்கே போகிறான் என்பதை நம்மால் கண்டுபிடிக்க முடியவில்லை.

கடம்பூர் மாளிகையில் நடந்த சதிக் கூட்டத்தில் இவன் கலந்து கொண்டானா என்றும் தெரியவில்லை. நல்ல வேளையாகக் குடந்தை சோதிடரைப் பற்றி இவனிடம் சொல்லி வைத்தோம். நம்மால் அறிய முடியாததைக் குடந்தை சோதிடராவது தெரிந்து கொள்ளுகிறாரா பார்க்கலாம்!"

"என்ன, சுவாமி! அரசமரத்தோடு பேசறீங்களா? உங்களுக்கு நீங்களே பேசிக்கிறீங்களா?" என்ற குரலைக் கேட்டு திருமலையப்பன் திரும்பிப் பார்த்தான். (தொடரும்...)

வல்லவரையனுடைய உள்ளமும் உடலும் குன்றிப் போயின. இம் மாதிரி அவமானத்தை இதற்கு முன் அவன் எக்காலத்திலும் அடைந்ததில்லை.

இத்தனை பெண்களுக்கு முன்னால் இப்படிப்பட்ட பேரவமானமா? இவர்கள் பெண்களா? இல்லை! இல்லை! இவர்கள் அரக்கிகள்! இவர்கள் பக்கத்திலேயே நிற்கக் கூடாது! இவர்களுடைய முகத்தை ஏறிட்டும் பார்க்கக் கூடாது! சீச்சீ என் அருமை வேலாயுதமே! உனக்கு இந்தக் கதியா நேர்ந்தது? இத்தகைய அவமானமா உனக்கு நேர்ந்தது? இதை எப்படி நிவர்த்தி செய்து உனக்கு நேர்ந்த மாசைத் துடை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண்ணாசை கொண்டு மண்ணை ஆண்ட மன்னவர் எல்லோரும் மடிந்து மண்ணாகி விடுவதை நீ அறிவாய். இருந்தும் நீ ஏன் மண்ணாசை கொண்டு அலைகிறாய். - வள்ளலார்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## சர்வதேச சமூகம் மட்டுமே நமக்கான பலம்

விடுதலைப் புலிகள் ஆயுதப் போராட்டம் நடத்தியபோது, தமிழ் மக்களின் மிகப்பெரும் பலமாக விடுதலைப் புலிகள் இருந்தனர்.

விடுதலைப் புலிகள் அமைப்பை முடிவுக்குக் கொண்டுவந்த பின்னர், தமிழ் மக்கள் அநாதைகளாயினர் என்பதைக் கூறித்தானாக வேண்டும்.

உண்மை. விடுதலைப் புலிகளுக்கு எதிரான கருத்தை உடையவர்களும் இதனை மனதார ஏற்றுக் கொள்வர்.

இதை நாம் கூறும்போது, தமிழ் அரசியல் தரப்புகள் எங்களின் பலமில்லையா? என்ற கேள்வியை எவரும் கேட்க மாட்டார்கள் என்பது தெளிவு. இருந்தும் அவ்வாறானதொரு கேள்வியை யாரேனும் எழுப்பினால், தமிழ் அரசியல் தரப்பில் தமிழ்த் தலைமையோ அன்றி தமிழ் மக்களுக்கான தலைவனோ இல்லை. மாறாக அங்கு தேர்தலில் போட்டியிடுகின்ற தமிழ் அரசியல்வாதிகளே உள்ளனர்.

தமிழ் மக்களுக்குச் சரியான தமிழ் அரசியல் தலைமை இருந்திருக்குமாயின், தமிழர் தரப்பு ஒற்றுமையாக இருந்திருக்கும்.

ஆக, தேர்தலை மையமாகக் கொண்ட தமிழ் அரசியல் தரப்புகள் இருப்பதன் காரணமாக, அனைத்துத் தமிழ்த் தரப்புகளும் ஒன்றுசேர்வது நடைமுறைச் சாத்தியமற்றதாயிற்று.

ஆம், தேர்தல் தொகுதிகள் - உள்ளூராட்சி சபைகளின் பங்கீடுகள் என்பவற்றினால் ஒவ்வொரு தடவையும் கட்சிகளுக்குள் குழப்பங்களும் சிக்கல்களும் ஏற்படுகின்றன.

இந்தநிலையில் இலாப நோக்கம் கொண்ட தமிழ் அரசியல் தரப்புகள் தனித்தனியே தேர்தல் வர்த்தகத்தை நடத்துவதே காலத்துக்குக் காலம் தங்களுக்கிடையில் ஏற்படுகின்ற பிரச்சினைகளுக்கும் குழப்பங்களுக்குமான ஒரே தீர்வு என்று முடிவு செய்தன.

அந்த அடிப்படையில் தேர்தலை மையப்படுத்திய வர்த்தக மாற்றங்களே சமகாலத்தில் தமிழ் அரசியல் தரப்புகளிடையே இடம்பெறுகின்றன.

நிலைமை இதுவாக இருக்கையில், தமிழ் மக்களின் பலமாக - தமிழ் மக்களின் தலைமையாக தமிழ் அரசியல் தரப்புகளைக் கருத முடியாது என்ற தீர்ப்பை வழங்க முடியும்.

இந்த இடத்தில் தமிழ் மக்களுக்கு இப்போது இருக்கின்ற ஒரே பலம் சர்வதேச சமூகம் மட்டுமே.

ஆம், ஏதோ நம் முன்னவர்கள் செய்த புண்ணியம் எங்கள் உறவுகள் புலம்பெயர்ந்து வெளிநாடுகளுக்குச் சென்று, அங்கு தங்களை ஸ்திரப்படுத்திக் கொண்டனர்.

இதன் ஊடாக, இலங்கையில் தமிழ் மக்கள்படும் அவலங்கள் நீண்டகாலமாக வெளிநாடுகளின் கவனத்துக்குக் கொண்டு வரப்படுகின்றன.

இதன்விளைவாக இலங்கையில் நடந்த தமிழின அழிப்பு, மனித உரிமை மீறல் சம்பவங்கள் வெளிநாடுகளால் உறுதி செய்யப்பட்டு இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டும் என்ற அழுத்தம் இலங்கை மீது கடுமையாகப் பிரயோகிக்கப்படுகிறது.

இதன் காரணமாகவே தமிழ் மக்களின் விவகாரம் குறித்து ஆட்சித் தரப்பு கவனம் செலுத்துகின்றது.

இந்த சூழமைவில் அரசியல்கைதிகளின் விடுதலை, காணி விடுவிப்பு என்பவற்றை விரைவுபடுத்துவதுடன் வலிந்து காணாமலாக்கப்பட்டவர்கள் தொடர்பில் உரியவர்களை சர்வதேச நீதிமன்றில் நிறுத்துவதையும் வலியுறுத்த வேண்டும்.

# கடந்த 24 மணித்தியாலங்களில் இடம்பெற்ற வீதி விபத்துக்களில்

## 2 குழந்தைகள் உட்பட 8 பேர் உயிரிழப்பு

(கொழும்பு)

கடந்த 24 மணித்தியாலங்களில் இடம்பெற்ற விபத்துகளில் இரண்டு குழந்தைகள் உட்பட 8 பேர் உயிரிழந்துள்ளனர்.

ராகலை பகுதியில் முச்சக்கர வண்டி ஒன்று கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் இரண்டரை வயது குழந்தையொன்று உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

முச்சக்கரவண்டியில் பயணித்த மற்றுமொரு குழந்தை காயமடைந்து நுவரெலியா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டதுடன் 16 வயதுடைய முச்சக்கரவண்டி சாரதி கைது செய்யப்பட்டுள்ளார்.

நாவலப்பிட்டி பகுதியில் பேருந்திலிருந்து தவறி விழுந்து 16 வயதுடைய பாடசாலை மாணவன் உயிரிழந்துள்ளதுடன், சம்பவம் தொடர்பில் பேருந்தின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கொழும்பு - மட்டக்களப்பு வீதியின் தலவத்துவன பகுதியில் மோட்டார் சைக்கிள் ஒன்று வானுடன் மோதியதில் 19 வயதுடைய இளைஞன் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இதேவேளை, மோட்டார் சைக்கிள் ஒன்று பேருந்துடன் மோதியதில் கலேன் பிந்துனுவெவ பிரதேசத்தைச் சேர்ந்த 23 வயதுடைய இளைஞன் உயிரிழந்துள்ளார்.

மேலும், பத்தேகம ஹம்மாலியா பகுதியில் மோட்டார் சைக்கிள் மற்றும் கெப் வாகனம் மோதியதில் பத்தேகம பிரதேசத்தைச் சேர்ந்த 31 வயதான இராணுவ சிப்பாய் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

மோட்டார் சைக்கிளும் லொறியும் மோதி விபத்துக்குள்ளானதில் 39 வயதுடைய நபர் ஒருவரும் உயிரிழந்துள்ளார்.

இதேவேளை, பத்தேகம மடவலமுல்ல பகுதியில் ஜீப் வண்டியுடன் மோதியதில் 50 வயதுடைய பாதசாரி ஒருவர் உயிரிழந்துள்ளதுடன், மோட்டார் சைக்கிள் வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளானதில் வெனிகந்த, சிங்கபுரவில் 57 வயதுடைய நபரும் உயிரிழந்துள்ளார். (ம-7)

# இருபாலையில் திருடப்பட்ட மோட்டார் சைக்கிள் மீட்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் இருபாலை பகுதியில், வாள் முனையில் கொள்ளையடிக்கப்பட்ட மோட்டார் சைக்கிளே அச்சுவேலி பகுதியில் மீட்கப்பட்டுள்ளது.

அச்சுவேலி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் கடந்த சனிக்கிழமை அநாதரவான நிலையில் காணப்பட்ட மோட்டார் சைக்கிள் தொடர்பில் பொலிஸாருக்கு அப்பகுதி மக்கள் கொடுத்த தகவலின் அடிப்படையில் பொலிஸார் மோட்டார் சைக்கிளை மீட்டு விசாரணைகளை முன்னெடுத்தனர். அதன் அடிப்படையில் குறித்த மோட்டார் சைக்கிள் கடந்த வெள்ளிக்கிழமை இரவு கோப்பாய் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் வாள் முனையில் வழிப்பறி கொள்ளையடிக்கப்பட்ட மோட்டார் சைக்கிள் என கண்டறியப்பட்டுள்ளது.

மோட்டார் சைக்கிளை வழிப்பறிசெய்த கொள்ளை கும்பல் தொடர்பிலும், மோட்டார் சைக்கிளை பயன்படுத்தி ஏதேனும் சட்டவிரோத செயலில் ஈடுபட்டனரா? என்பது தொடர்பிலும் அச்சுவேலி மற்றும் கோப்பாய் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (4-6,33)

## பற்சிகிச்சை உபகரணங்கள்,மருந்துகளுக்கு நாட்டில் கடும் தட்டுப்பாடு - அரச பற்சிகிச்சை சங்கம்

(கொழும்பு)

அரச மருத்துவமனைகளில் பற்சிகிச்சை உபகரணங்கள் மற்றும் மருந்துகளுக்கு கடும் தட்டுப்பாடு நிலவுவதாக அரச பற்சிகிச்சை நிபுணர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

பல் நிரப்புதல், பல் பாதுகாப்பு உள்ளிட்ட சிகிச்சைகளுக்கு தேவையான மருந்துகளுக்கு கடும் தட்டுப்பாடு நிலவு வதாக அந்த சங்கத்தின் செயலாளர் மருத்துவ நிபுணர் மஞ்சுளா ஹேரத் தெரிவித்துள்ளார்.

இதன்காரணமாக சிகிச்சைக்கு வரும் நோயாளிகள் நீண்ட நேரம் காத்திருப்போர் பட்டியலில் காத்திருக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (நி)

# ஓவியமும் கணினியமும் கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

தேசிய கல்வி நிறுவக திறந்த பாடசாலை அலகினரின் அனுசரணையுடன் கைதடி திறந்த பாடசாலை நடத்தும் ஓவியமும் கணினியமும்" எனும் தலைப்பில் ஓவியக் கலை, கணினி வரைகலை கண்காட்சி இன்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு யா/கைதடி நவீல்ட் பாடசாலைவளாக செரண்டிப் மண்டபத்தில் யா/கைதடி நவீல்ட் பாடசாலை பிரதி அதிபர் ப.பவிராஜ் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் விருந்தினராக தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் த.கிருபாகரன், பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக சித்திரமும் வடிவமைப்பும் விரிவுரையாளர் த.டிலக்சன் ஆகியோர் கலந்து கொள்கின்றனர். (4)

# அதிபர் பதவி வெற்றிடத்திற்கு விண்ணப்பங்கள் கோரல்

(யாழ்ப்பாணம்)

யா/மிருசுவில் அ.த.க. பாடசாலை (வகை- II), யா/ மட்டுவில் கமலாசனி வித்தியாலயம் (வகை II), யா/ மட்டுவில் தெற்கு சரஸ்வதி வித்தியாலயம் (வகை -II), யா/கோவிலாக் கண்டி மகாலட்சுமி வித்தியாலயம் (மீள் விண்ணப்பம்கோரல்) (வகை-III), யா/சரசாலை ஸ்ரீ கணேசா வித்தி யாலயம் (மீள் விண்ணப்பம் கோரல்) (வகை-III), யா/ சாவகச்சேரி சக்தியம்மன் தமிழ் கலவன் பாடசாலை (மீள் விண்ணப்பம் கோரல்) (வகை-III), யா/சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை (வகை-III), யா/ சாவகச்சேரி றோ.க. த.க. பாடசாலை (வகை-III) ஆகிய பாடசா லைகளில் காணப்படும் அதிபர் பதவி வெற்றி டத்தை நிரப்புவதற்கான விண்ணப்பங்கள் தென்மராட்சி கல்வி வலயத்தினால் கோரப்படுகின்றன.

இப் பதவிக்கு வட மாகாணத்தில் கடமையாற்றுகின்ற இலங்கை அதிபர் சேவை வகுப்பு -II ஐச் சேர்ந்த அதிபர்கள் மற்றும் வகுப்பு III ஐச் சேர்ந்த அதிபர்களிடமிருந்தும் பொருத்தமான பாடசாலைக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பிக்க விரும்புவோர் தத் தமது வலயக் கல்வி அலுவலகங்களில் விண்ணப்பங்களைப் பெற்று வலயக் கல்விப் பணிப்பாளரின் சிபாரிசுடன் 30.01.2023 ஆம் திகதிக்கு முன்னர் எமக்கு கிடைக்கக் கூடியதாக "வலயக் கல்விப் பணிப்பாளர், வலயக் கல்வி அலுவலகம், தென்மராட்சி, சாவகச்சேரி "என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பிவைக்கவும்.

விண்ணப்பதாரி ஆகக் குறைந்தது 3 வருட கால மேனும் சேவையாற்றக் கூடிய வயதெல்லையை உடையவராக இருத்தல் வேண்டும் என வலயக் கல்வி பணிப்பாளர் த.கிருபாகரன் அறிவித்துள்ளார். (4)

# அட்டைப் பண்ணைக்கு எதிர்ப்பு தெரிவித்து மன்.பேருந்து நிலையத்தில் இன்று போராட்டம்

(அராலி)

அராலித்துறையில் அட்டைப் பண்ணை வேண்டாம் என மக்கள் கருத்து தெரிவித்த நிலையில் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு குரல் கொடுக்கும் அமைப்பாக இன்று 17 ஆம் திகதி மன்னார் பேருந்து நிலையத்தில் போராட்டமொன்றை ஆரம்பிக்கவுள்ளோம்.

இப் போராட்டத்திற்கு சிவில் அமைப்புக்கள் மற்றும் அரசியல் தலைமைகள் அனைவருக்கும் பகிரங்க அழைப்பு விடுகின்றோம் என யாழ்.மாவட்ட மீனவ ஒத்துழைப்பு இயக்க தலைவர் இரத்தின சிங்கம் முரளிதரன் தெரிவித்தார்.

யாழில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில், இன்று மன்னார் பேருந்து நிலையத்தில் இடம் பெறும் போராட்டத்திற்கு அரசியல்வாதிகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டதன் பிரதான நோக்கம் கடந்த 76 நாட்களாக மக்கள் போராடிவரும் நிலையில் எந்தவொரு அரசியல்வாதியும் களத்திற்குச் செல்லவில்லை. களத்திற்குச் சென்ற எவரும் எவ்வித தீர்வுகளையும் வழங்கவில்லை. அட்டைப் பண்ணை வேண்டாமென நாங்கள் எதிர்க்கவில்லை. ஆனால் அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட இடங்களில் மேற்கொள்ளலாம் என மேலும் தெரிவித்தார். (4-6,104)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வட்டுக்கோட்டை அராலி குளத்தில் காசி புனித தீர்த்தம் கலப்பு



(யாழ்ப்பாணம்)
யாழ். வட்டுக்கோட்டை - அராலி உப்புவயல் குளத்தருகில் நேற்று பட்டிப் பொங்கல் பண்டிகை கொண்டாடப்பட்டது.

கலாநிதி. சிதம்பரமோகன் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் யாழ். இந்திய துணைத் தூதுவர் ராகேஷ் நட்ராஜ் ஜெயபாஸ்கர் சிறப்பு அதிதியாக கலந்து கொண்டார்.

இதன்போது கலாநிதி. சிதம்பரமோகனால் இந்தியா காசியில் இருந்து எடுத்து வரப்பட்ட புனித காசி தீர்த்தமானது யாழ். இந்திய துணைத் தூதுவரால் குளத்தில் கலக்கப்பட்டது. பின்னர் பட்டிப் பொங்கல் நிகழ்வு நடைபெற்றது. (4-6-104)

# தடுப்புக் காவலில் நின்ற பாரவூர்தி தீயிட்டு எரிப்பு



(தருமபுரம்)
மரக்கடத்தலுக்கு பயன்படுத்தப்பட்டு பறிமுதல் செய்யப்பட்டு பூநகரி வனஜீவராசிகள் திணைக்களத்தில் தடுத்து வைக்கப்பட்ட பாரவூர்தி நேற்று முன்தினம் இரவு இனந்தெரியாத நபர்களினால் தீயிட்டு எரிக்கப்பட்டுள்ளது.

சம்பவ இடத்திற்கு அருகில் நின்ற சிலர் தீயை அணைத்த போதிலும் வாகனம் முழுமையாக தீக்கிரையானது.

சம்பவம் தொடர்பாக பூநகரி பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (4-6-316)



திருமறைக் கலாமன்றத்தின் பொங்கல் விழாவும் கலை நிகழ்வுகளும் நேற்று முன்தினம் சிறப்பாக இடம்பெற்றது.



தீபச்செல்வனின் பயங்கரவாதி நாவல் வெளியீட்டு விழா நேற்று முன்தினம் கரைச்சி பிரதேச சபை மண்டபத்தில் யாழ். பல்கலைக்கழக ஊடக கற்கைகள் துறை பேராசிரியர் சி. ரகுராம் தலைமையில் இடம்பெற்றது. (படம் - தேவானந்தன்)

# சிங்கள மொழிப் பயிற்சி ஆசிரியர்களை இணைக்க வடக்கு ஆளுநர் பணிப்புரை

(அராலி)
இரண்டாம் மொழி சிங்கள டிப்ளோமா சான்றிதழ் பயிற்சி நெறியைப் பூர்த்தி செய்த ஒரு பகுதி மாணவர்களை வடக்கு மாகாணத்தில் உள்ள பாடசாலைகளில் ஆசிரியர்களாக நியமிப்பதற்கு வட மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா வட மாகாண கல்வி அமைச்சின் செயலாளருக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

இந்து பௌத்த கலாசார பேரவையினால் நடத்தப்பட்டு வருகின்ற இரண்டாம் மொழி சிங்கள கற்கை நெறியை பூர்த்தி செய்து மேலதிக பயிற்சிகளை பெற்ற மாணவர்களே இவ்வாறு பாடசாலைகளில் தற்காலிகமாக இணைக்கப்படவுள்ளனர். (4-6-104)

# ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி யாழில் கட்டுப்பணம்

(யாழ்ப்பாணம்)
ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ளூராட்சிமன்ற தேர்தலுக்கான கட்டுப்பணத்தை நேற்று செலுத்தியது.

யாழ்ப்பாண மாவட்ட செயலகத்திலுள்ள தேர்தல்கள் அலுவலகத்தில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட உப தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதனால் செலுத்தப்பட்டது.

யாழ். மாவட்டத்தின் சகல உள்ளூராட்சி சபைகளுக்கும் இதன்போது கட்டுப்பணம் செலுத்தப்பட்டது.

வடகிழக்கு மாகாணங்களில் நடைபெற இருக்கும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி கை சின்னத்தில் போட்டியிடவுள்ளது என அங்கஜன் இராமநாதன் தெரிவித்தார். (4-6-33)

# எம்.ஜி.ஆரின் 100 ஆவது பிறந்தநாள் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)
மறைந்த முன்னாள் தமிழக முதல்வர் எம்.ஜி.ஆரின் 100 ஆவது பிறந்தநாள் விழா இன்று 17 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை 3 மணிக்கு சித்தங்கேணி வீதி வடலியடைப்பு கலை கலாசார மண்டபத்தில் வடமாகாண எம்.ஜி.ஆர் முன்னேற்றக் கழக ஆலோசகர் Dr.Rev.Fr.S. சுபாஸ் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு யாழ். இந்திய துணைத்தூதுவர் ராகேஸ் நட்ராஜ் விருந்தினராக கலந்து கொள்ளவுள்ளார். (4)

# மின்கம்பத்துடன் மோதி கப் ரக வாகனம் விபத்து



(தருமபுரம்)
கிளிநொச்சி தருமபுரம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட நெத்திலி ஆற்றுப் பகுதியில் கட்டுப்பாட்டை இழந்த கப்ரக வாகனம் மின்கம்பத்துடன் மோதுண்டு விபத்துக்குள்ளானது.

இதன் போது எவருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை. மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (4-6-316)



# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 800 | 650 | 700 | 700 |
| உருளைக்கிழங்கு | 140 | 150 | 150 | 160 |
| பச்சைமிளகாய் | 450 | 500 | 450 | 400 |
| தக்காளி | 250 | 240 | 250 | 300 |
| மரவள்ளிக்கிழங்கு | 180 | 180 | 200 | 280 |
| கோவா | 80 | 120 | 140 | 150 |
| கரட் | 250 | 240 | 280 | 300 |
| பூசணி | 100 | 140 | 140 | 160 |
| புடோல் | 300 | 280 | 200 | 240 |
| வாழைக்காய் | 150 | 180 | 150 | 160 |
| சின்ன வெங்காயம் | 600 | 600 | 800 | 800 |
| பெரிய வெங்காயம் | 200 | 190 | 200 | 250 |
| பாகற்காய் | 450 | 600 | 550 | 800 |
| வெண்டிக்காய் | 250 | 300 | 240 | 400 |
| கருணைக் கிழங்கு | 100 | 100 | 120 | 150 |
| பயற்றங்காய் | 600 | 400 | 600 | 500 |
| லீக்ஸ் | 450 | 300 | 400 | 400 |
| பீற்றூட் | 400 | 300 | 400 | 500 |
| கறிமிளகாய் | 700 | 700 | 800 | 700 |
| முருங்கைக்காய் | 1700 | 1800 | 1200 | 1500 |
| போஞ்சி | 500 | 300 | 400 | 500 |
| கத்தரிதம்புள்ள | 750 | 500 | -- | 500 |
| கீரை - 1 பிடி | 140 | 100 | 100 | 150 |
| தேசிக்காய் | 80 | 100 | 120 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 90 | 90 | 85 | 70-100 |
| இராசவள்ளி | 350 | 350 | -- | 320 |
| வெங்காயப்பூ | 450 | 400 | -- | 800 |
| முள்ளங்கி | 80 | 120 | 150 | 120 |
| பொன்னாங்காணி | 100 | 100 | 100 | 80 |
| வல்லாரை | 50 | 36 | 40 | 50 |
| ஈரப்பலா | 100 | -- | -- | 180 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிணற்றுக்குள்...

சேர்ந்த 61வயதான கஜேந்திரலிங்கம் என்பவரே இவ்வாறு கிணற்றுக்குள் தவறிவிழுந்து உயிரிழந்துள்ளார்.

மரணம் தொடர்பான மேலதிக விசாரணைகளை சாவகச்சேரிப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ம-7,30)

## மாவிட்டபுரத்தில்...

பட்டா வாகனச் சாரதி கைது செய்யப்பட்டுள்ளதோடு விபத்து தொடர்பாக காங்கேசன்துறைப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,33,104)

## மோ.சைக்கிள்...

இவ்வாறு உயிரிழந்தவராவார்.

கடந்த வெள்ளிக்கிழமை வீட்டில் இருந்து வழமைபோல் உரும்பிராய் காளிகோவிலுக்கு துவிச்சக்கரவண்டியில் சென்றுள்ளார்.

இந்நிலையில் பின்பக்கமாக அதிவேகமாக வந்த மோட்டார் சைக்கிள் அவரை மோதித் தள்ளியது.

இதில் மயக்கமடைந்தவரை விபத்தை ஏற்படுத்திய நபரே யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதித்துள்ளார்.

இந்நிலையில் குறித்த வயோதிபர் சிகிச்சை பலனின்றி நேற்று திங்கட்கிழமை அதிகாலை 1.30 மணியளவில் உயிரிழந்தார்.

இம் மரணம் தொடர்பில் யாழ். போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேமகுமார் விசாரணைகளை மேற்கொண்டார். (ம-7,60)

## காணி விடுவிப்பு...

இவ்வாறு பதில் வழங்கினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், வலி.வடக்கில் எந்தக் காலப்பகுதிக்குள் காணிகள் விடுவிக்கப்படும் என சொல்லவில்லை, 108 ஏக்கர் காணி உடனடியாக விடுவிக்கப்படலாம் என சொல்லுகின்றார்கள்.

உடனடியாக விடுவிக்கப்படலாம் என பல நாட்களாக சொல்லுகின்றார்கள். ஆனால் இன்னும் விடுவிக்கப்படவில்லை. அதனால் நேற்றைய (நேற்று முன்தினம்) கூட்டத்தில் சொல்லப் பட்ட விடயங்கள் தொடர்பாக எங்களுக்கு பெரிதாக நம்பிக்கை இல்லை என தெரிவித்துள்ளார். (ம-7,33,104)

## மின்மானி வாசிப்...

காயத்திற்குள்ளான நிலையில் சிலாபம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சிலாபம் மின் பொறியியலாளர் அலுவலகத்தின் கீழ் சேவையாற்றும் மின்மானி வாசிப்பாளர் மீதே இந்த தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. (ம-7)

## நாட்டில் வேலை...

துள்ளதாக அதன் சமீபத்திய தரவு அறிக்கைகள் காட்டுகின்றன.

2022 ஆம் ஆண்டின் இரண்டாவது காலாண்டில், வேலையின்மை விகிதம் 4.6% ஆக இருந்தது.

மற்றும் தொழில்துறையில் வேலை வாய்ப்பு 2022 ஆம் ஆண்டின் இரண்டாவது காலாண்டில் 27.7% ஆக உள்ளது.

இது 2022 மூன்றாம் காலாண்டில் 25.9% ஆக குறைந்துள்ளது.

சேவைத் துறையில் வேலைவாய்ப்பு 46.3%லிருந்து 47.2% ஆகவும் விவசாயத் துறையில் வேலைவாய்ப்பு 26% லிருந்து 26.9% ஆகவும் அதிகரித்துள்ளது. (ம-7)

## அரசாங்கத்துக்கு...

கொள்ளுப்பிட்டி பகுதியில் ஆர்ப்பாட்டக்காரர்களைக் கலைப்பதற்காக இவ்வாறு கண்ணீர்ப்புகை மற்றும் நீர்த்தாரை பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது.

இந்த ஆர்ப்பாட்டத்தின் காரணமாக நேற்று காலி வீதி , கொள்ளுப்பிட்டியிலிருந்து பம்பலப்பிட்டி வரையான போக்குவரத்து பாதிக்கப்பட்டிருந்தது. இதன்போது பொலிஸாரினால் பிரதான வீதி மறிக்கப்பட்டிருந்தமையால் ஆர்ப்பாட்டக்காரர்கள் மெரைன் டிரைவ் வீதியில் தொடர்ச்சியாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

150 நாட்களுக்கும் மேலாக தடுத்து வைக்கப்பட்டுள்ள அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டாளர் வசந்த முதலிகேவை விடுவிக்குமாறும் பயங்கரவாத தடைச் சட்டத்தை செல்லுபடியற்றதாக்குமாறும் வாழ்க்கைச் செலவு அதிகரித்துள்ளமைக்கு எதிர்ப்பு தெரிவித்தும் இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் யூனியன் ப்ளேஸ் ஊடாக காலி முகத்திடலுக்குள் பிரவேசிப்பதற்கு நீதிமன்றத்தினால் தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## 13ஐ அமுல்...

யாக அமுல்படுத்தினால் நாடு குறுகிய காலத்திற்குள் பிளவுபடும்.

13ஆவது திருத்தத்தை முழுமைப்படுத்தினால் பிரிவினைவாத கொள்கையுடைய அரசியல் தலைவர்களின் நோக்கம் நிறைவேறுமே தவிர, தமிழ் மக்கள் எதிர்கொண்டுள்ள உண்மை பிரச்சினைகளுக்கு ஒருபோதும் தீர்வு கிடைக்காது.

வடக்கு மற்றும் கிழக்கு மக்களின் அடிப்படை பிரச்சினைகளுக்கு தீர்வு காண 1957ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட சமூக ஏழ்மை ஒழிப்பு சட்டத்தை முழுமையாக செயற்படுத்த வேண்டும் என தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர், பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸ ஜனாதிபதியிடம் வலியுறுத்தியுள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க யாழ்ப்பாணத்தில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற அரச பொங்கல் பண்டிகை நிகழ்வில் கலந்து கொண்டு அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதாக குறிப்பிட்டார்.

இவ்விடயம் தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸ ஜனாதிபதி, பிரதமர், பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் மகாநாயக்க தேரர்களுக்கு கடிதம் அனுப்பி வைத்துள்ளார். (ம-7)

## தேர்...

தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

பொலிஸ் அஞ்சல் திணைக்களம், அரச அச்சக திணைக்களம் மற்றும் அனர்த்த முகாமைத்துவ மையம் உள்ளிட்ட பல்வேறு பிரிவுகளுடனான கலந்துரையாடல் நிறைவடைந்துள்ளதாக அதன் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

## விசேட...

யுள்ள உத்தியோகபூர்வ இல்லம், பயன்படுத்தும் உத்தியோகபூர்வ வாகனம் போன்றவை இவற்றில் அடங்குகின்றன.

# தேர்தல் தவறில்லை
## சபாநாயகர்

(கொழும்பு)

பொருளாதார நெருக்கடி ஏற்பட்டாலும் ஜனநாயகத்தை பாதுகாப்பது முக்கியம் என சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்தன தெரிவித்துள்ளார்.

ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும்போதே சபாநாயகர் இவ்வாறு கூறியுள்ளார்.

எனவே அதற்கேற்ப தேர்தலை நடத்துவதில் தவறில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ம-7)

அவற்றுக்கான விசேட வரியை அறவிடுவது குறித்து அரசாங்கம் பல்வேறு தரப்புடன் கலந்துரையாடி இருப்பதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பான இறுதி முடிவு இந்த மாதம் எடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ம-7)


ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 16/01/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1457
வெற்றி இலக்கங்கள்
கன்னி 5 8 8 5 7 6
தேசிய லொத்தர் சபை

தன நிதானய
திகதி - 2023.01.16
சீட்டிழுப்பு இலக்கம் - 1032
N 24 31 50 58
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்

கொவிசெத
திகதி 2023.01.16
சீட்டிழுப்பு இலக்கம் 3244
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்
O 19 38 49 64
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 16/01/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1350
வெற்றி எழுத்து சுப்பர் இலக்க வெற்றி இலக்கங்கள்
H 23 02 10 61 66

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2023.01.16
சீட்டிழுப்பு இலக்கம் 311
மிதுனம் 24 36 42 52 மிதுனம்
தேசிய லொத்தர் சபை

மஹஜன சம்பத
திகதி 2023/01/16
சீட்டிழுப்பு இலக்கம் 5002
P 3 9 8 3 0 0
தேசிய லொத்தர் சபை

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1977
நிறம் ஊதா
சீட்டிழுப்பு திகதி 2023.01.16
தினம் திங்கட்கிழமை
H 01 39 44 65
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 3,355,720/-

சனிதா
திங்கட்கிழமை
சீட்டிழுப்பு திகதி : 2023.01.16
சீட்டிழுப்பு இல : 4138
வர்ணம் : நீலம்
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 5,140,800/-
வெற்றி இலக்கங்கள் 27 54 60 61 F

ராசி
சுப்பர் ஜக்பொட் ரூ. 4,431,776/-
திகதி 2023-01-16
வெற்றி வாரம் 3689
வர்ணம் மஞ்சள்
வெற்றி இலக்கங்கள் 02 17 36 44
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 9,538,480/-

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
H 33 14 26 51 53
சுப்பர் இலக்கம்
சீட்டிழுப்பு வாரம் 1153
வர்ணம் இள நீலம்
திகதி 2023.01.16 திங்கட்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 298,076,540.20
தொலைபேசி : 011-2 333 546-47
Web : www.dlb.lk

ஜயோதா Jayoda
சீட்டிழுப்பு வாரம் 1888
சீட்டிழுப்பு திகதி 2023-01-16
வெற்றி இலக்கங்கள் 05 11 22 43 V
எதிர்வரும் சுப்பர் பரிசுத்தொகை ரூ. 38,954,846/-
தொ. பே.: 0112 333 546/47
Web: www.dlb.lk

அத கோடிபதி ADA KOTIPATHI
திங்கட்கிழமை
சீட்டிழுப்பு இல : 1803
வர்ணம் : சிவப்பு
சீட்டிழுப்பு திகதி : 2023.01.16
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 5,110,020/-
வெற்றி இலக்கங்கள் 15 16 58 64 W


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யுவதியை அநாகரிகமாக திட்டிய இ.போ.ச. சாரதி

## மன்னிப்பு கோரினார்

(யாழ்ப்பாணம்)

யுவதியொருவரை அநாகரிகமாக திட்டிய இலங்கை போக்குவரத்துசபை பேருந்து சாரதி மன்னிப்பு கோரிய சம்பவம் இடம்பெற்றுள்ளது.

பருத்தித்துறை சாலையை சேர்ந்த பேருந்து சாரதியொருவரே இவ்வாறு மன்னிப்பு கோரியுள்ளார்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில், பருத்தித்துறை - யாழ்ப்பாணம் மார்க்கத்தில் பயணிக்கும் யுவதியொருவர். பருவகாலசீட்டு பெற்று பயணம் செய்து வந்துள்ளார். ஆவரங்காலிற்கு அண்மித்த பகுதியில் அவர் பேருந்தில் ஏறுவது வழக்கம்.

தன்னை. குறிப்பிட்ட ஒரு பேருந்து சாரதி ஏற்றிச் செல்வதில்லையென யுவதி இ.போச விற்கும் முறைப் பாடு செய்திருந்தார்.

எனினும் தொடர்ந்தும் யுவதியை பேருந்து ஏற்றிச்செல் லவில்லை

இந்த நிலையில் யுவதியின்உறவினர்களும்பேருந்து தரிப் பிடத்திற்கு வந்து, பேருந்தை மறித்து. யுவதியை ஏற்றி விட்டனர்.

இதன்போது . உறவினர்கள் பேருந்து சாரதியுடன் முரண்பட்டிருந்தனர். இந்த நிலையில். யாழ்ப்பாணம் மத்திய பேருந்து நிலையத்தில் பேருந்து நிறுத்தப்பட்ட போது. யுவதியை அநாகரிக மான முறையில் சாரதி திட்டியுள்ளார். இதுதொடர்பில், யாழ்ப்பாணம் பொலிஸ்நிலையத்தில் யுவதி முறைப்பாடு செய்திருந்தார்.

இதையடுத்து, சாரதியை பொலிஸார் அழைத்து எச்சரிக்கை செய்தனர்.

தனது செயலுக்காக யுவதியிடமும் சாரதி மன்னிப்பு கோரினார். (ம-7.104)


வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

**ஆகாஸ் நகை மாடம்**

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (14281)

076 825 7716 (ஆகாஸ்)



**காண்டம் பார்த்தல்**

உங்கள் வாழ்வில் நடந்த மற்றும் நடக்கப் போகின்ற அனைத்து விடயங்கள், பிள்ளைகளின் யாதகக் குறிப்புகள், அவர்களின் பலன்களும் துல்லியமாக கணித்து பெற்றுக் கொள்ளலாம். திருமணத்திற்கு வெளிநாடு செல்ல விரும்பும் மணமக்கள் உடனடியாக தேவை. எல்லா வயதினரும் தொடர்பு கொள்ளவும்.

**காயத்திரி திருமண சேவை**

தொடர்புகளுக்கு (உரும்பிராய்)

076 835 1932 / 021 223 2222

வெளிநாட்டு திருமணத் தொடர்புகளுக்கு

Wahlen STR - 143 - 4242 Laufen, Swiss

Tel: 0041768185443 Whatsapp இல் மட்டும்

(14275)



**கொக்குவில் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் (தாய்ச் சங்கம்) நடாத்தும் ஒன்று கூடலும் இராப்போசனமும்.**

**(KHC NIGHT 2022)**

காலம் :- 21.01.2023 சனிக்கிழமை

நேரம் :- பி.ப. 4.00 மணி

இடம் :- கல்லூரி பஞ்சலிங்கம் கேட்போர்கூடம்

**ரிக்கற்றுக்களை பின்வரும் இடங்களில் பெற்றுக்கொள்ள முடியும்**

கல்லூரியில்

செல்வா மின்சார நிலையம் – திருநெல்வேலி

மங்களாகாட்சியகம் – கே.கே.எஸ்வீதியாழ்ப்பாணம்

சாருஜன் தொலைத்தொடர்பு – கொக்குவில்

**கொக்குவில் இந்துக்கல்லூரி, பழைய மாணவர் சங்கம்.**


## உலக பொருளாதாரம் துண்டாடப்பட்டுள்ளது

கடந்த பல ஆண்டுகளாக உலகப் பொருளாதாரம் துண்டாடப்படுவதால், ஒவ்வொரு நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியிலும் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளது.

வளரும் மற்றும் குறைந்த வருமானம் கொண்ட நாடுகளில் இது அதிக தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளதாக நிதியம் சுட்டிக்காட்டுகிறது. இதன்படி, அபிவிருத்தியடைந்து வரும் நாடுகள் எதிர்காலத்தில் பல பொருளாதார பிரச்சினைகளை எதிர்கொள்ள வேண்டியிருக்கும் என சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளது. (ம-7)

## ஹெலிகொப்டர் கூட்டணியிலிருந்து சுதந்திரக் கட்சி விலகியது

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி (SLFP) புதிதாக உருவாக்கப்பட்டுள்ள 'சுதந்திர மக்கள் கூட்டமைப்பிலிருந்து' விலகத் தீர்மானித்துள்ளது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலைக் கருத்தில் கொண்டு, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி பல அரசியல் கட்சிகள் மற்றும் பாராளுமன்றத்தில் உள்ள சுயேட்சை எம்பிக்கள் குழுவுடன் இணைந்து புதிய கூட்டணியை உருவாக்கியது.

'ஹெலிகொப்டர்' சின்னத்தில் உருவாக்கப்பட்ட 'சுதந்திர மக்கள் கூட்டமைப்பு' கடந்த வாரம் கொழும்பில் உள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையகத்தில் திறந்து வைக்கப்பட்டது.

எவ்வாறாயினும் புதிய கூட்டணியில் இருந்து விலகி, தேர்தலில் சுயேச்சையாக போட்டியிடுவது என ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் செயற்குழு நேற்று தீர்மானித்துள்ளது. (ம-7)


**தீபம் கல்வி நிலையம்**

(இல.11 டேவிட் வீதி, யாழ்ப்பாணம்.)

"சாதனையாளர்கள் பிறப்பதில்லை உருவாக்கப்படுகின்றனர்"

**A/L 2023 / A/L 2024**

தமிழ்மொழி மூலம், English Medium வகுப்புக்கள்

கணக்கீடு :- V.தமிழ்ஈசன்

பொருளியல் :-M.லிஜிதன்

வணிகக்கல்வி :-B.கோபிதன்

**A/L 2023 Batch**

இற்கு ஆரம்பத் தேர்ச்சியிலிருந்து Paper Class நடைபெறுகின்றது.

தொடர்புகளுக்கு- 077 224 7781

(14286)



**வேலைவாய்ப்பு**

பருத்தித்துறை வீதி, புத்தூரில் அமைந்துள்ள கட்டட ஒப்பந்த நிறுவனம் ஒன்றிற்கு வேலையாட்கள் தேவை.

1. Account Cleark
2. Technical Assistant
3. Technical Trainees (Civil)

தொடர்புகளுக்கு:

076 699 0795, 076 649 1395

(14278)



**வேலை ஆட்கள் தேவை**

யாழ் நகரில் உள்ள புடைவை விற்பனை நிலையத்துக்கு அனுபவம் உள்ள ஆண், பெண் விற்பனையாளர் உடன் தேவை. மேலும் சிட்டை எழுதினர் (பில் கிளாக்) உடன் தேவை.

தொடர்புகளுக்கு :

076 659 5578

(14285)



**பேக்கரி வேலையாட்கள் தேவை**

நன்கு அனுபவமுள்ள பேக்கரி பாஸ் தேவை

தொடர்பு :

புதிய துர்க்கா வெதுப்பகம்

கலைவாணி வீதி, பொற்பதி றோட், கொக்குவில் கிழக்கு, யாழ்ப்பாணம்.

077 622 8868 (14276)



**கடை விற்பனைக்குண்டு**

இல 13, செம்மார் தெரு லேன், கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள 25 அடி நீளமும் 16 அடி அகலமும் உடைய கடை விற்பனைக்குண்டு.

**விலை நேரில் பேசி தீர்மானிக்கப்படும்.**

பார்வையிடும் நேரம் ; காலை 9 மணி முதல் மாலை 6 மணி வரை

தொடர்பு : ஜெயம் - 077 986 5457

(14282)


**கண்ணீர் அஞ்சலி**



யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியின் ஆசிரியர் திரு அருளானந்தகுமார் அவர்களின் தந்தையார்

அமரர் **கதிரன் கந்தையா**

தோற்றம் - 01.02.1941

மறைவு - 04.01.2023

மீளாத்துயில் கொண்டு எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்திச் சென்றீரே? கலையாத நினைவுகளுடன் உதிரும் கண்ணீர் பூக்களால் அர்ச்சித்து உங்கள் ஆத்மா சாந்தியடைய எங்கள் கண்ணீர் துளிகளைக் காணிக்கையாக்குகிறோம்.

ஆசிரியர் கழகம் – யாழ்.இந்துக்கல்லூரி.

(C-5805)


1985ம் ஆண்டிலிருந்து இன்று வரையான தனித்துவமிக்கதொரு பயிற்சி நிலையம்.

யாழ் **கலாலயா** பயிற்சியகம்

இலங்கையின் மூன்றாம் நிலைக் கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணையத்தால் (TVEC) பதிவு செய்யப்பட்ட பயிற்சி நிலையம்

விக்ரோறியா வீதி, யாழ்ப்பாணம். (யாழ். போதனா வைத்தியசாலை பின் புற வீதி)

**மகளிருக்கான 3 மாத பயன்மிகு பயிற்சிகள் ஆரம்பமாகின்றன!**

கேக் ஐசிங், 8 வகையான கேக்குகள் தயாரித்தல், உணவு தயாரித்தல், Hair Dressing & Styling, Facials, Make up, மணப்பெண் அலங்காரம், வித்தியாசமான 7 முறைகளில் சேலை அணிதல் போன்ற பயிற்சிகள்...



சனி, ஞாயிறு புதிய பிரிவுகள் ஆரம்பம் 22.01.2023 ஞாயிறு காலை 10.00

கிழமை நாள் புதிய பிரிவுகள் ஆரம்பம் 25.01.2023 புதன் காலை 10.00

மேலும் விபரங்களை நேரில் அறிந்து கொள்ளலாம். -இயக்குநர்-

(C-5802)


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 17.01.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org